2002 அக்டோபர் 25]

மேலும் மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற அடிப்படையில் விதிமுறைகளுக்கு உட்பட்டு புதியதாக கால்நடை மருத்துவமனையோ, கிளைநிலையமோ திறக்கப்பட வேண்டுமென்றால் அரசினுடைய நிதிநிலைக்கு ஏற்ப பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டுமென்பதை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 19, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.*

19 –

கட்டடங்கள்

***15185 – திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம், கயத்தாறு, கழுகுமலை போன்ற இடங்களில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியர் இல்லங்களுக்கு அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தருமா?

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு சீர்மரபினர் மாணவர் விடுதி ரூ.31.50 இலட்சம் செலவில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கழுகுமலை மற்றும் ஒட்டப்பிடாரம் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் நடப்பு நிதியாண்டில் இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. சிவபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் நித்தம் வணங்கும் அம்மாவை வணங்கி, ஒட்டப்பிடாரம் தொகுதியிலே 5 அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியர் இல்லங்கள் உள்ளன. அவை அனைத்தும் வாடகைக் கட்டடத்தில்தான் செயல்பட்டு வருகின்றன. இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்த

நிலையை மாற்றி, முதன்முதலில் 2001-2002-ல் கயத்தாறு பிற்படுத்தப்பட்டோர் அரசு மாணவர் இல்லத்திற்கு ரூ.31.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. அதேபோல, ஏழையெளிய பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவிகள் அதிகமாக வாழும் கழுகுமலை, ஒட்டப்பிடாரம், கில்லாங்குளம் பகுதிகளிலே பிற்பட்ட அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் இல்லம் கட்டித்தர அம்மாவின் அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அடிப்படை வசதிகள் இல்லாமல் தனியார் கட்டடங்களில் இயங்கிக்கொண்டிருக்கும் விடுதிகளுக்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு விடுதிக் கட்டடமும் ரூ.31.50 இலட்சம் செலவில் அத்தனை அடிப்படை வசதிகளுடன் கட்ட ஆணையிட்டு, 100 விடுதிகள் இப்பொழுது தமிழகத்தில் கட்டடங்கள் வரப்பெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும், நிதிநிலைக்கு ஏற்ப அடுத்த வருடம் மற்ற கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யும் என்று இந்த மாமன்றத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி டி. யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுடைய விடுதிகளை அமைப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியில் சென்ற ஆண்டு 12 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதேநேரத்திலே பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக கிட்டத்தட்ட 22 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு வறட்சியின் காரணமாக அந்தக் கட்டடங்கள் கட்டுவதற்குரிய தொகையிலே பாதியை குடிநீருக்காக நாம் எடுத்த பிறகு 5 இலட்சம் ரூபாய் மட்டுமே கட்டடங்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்தது, வரையறுக்கப்பட்டுள்ளது. ஆக, இந்தக் குழப்பமான சூழ்நிலையில், விடுதிகள் கட்டுவதற்கு 12 இலட்சம் ரூபாயா, 22 இலட்சமா, 5 இலட்சமா என்பதை முறைப்படுத்தி அமைச்சர் அவைக்கு அறிவிப்பாரா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசு விடுதிகளில்

2002 அக்டோபர் 25]

படிக்கும் மாணவர்களுக்கு அத்தனை அடிப்படை வசதிகளும் வேண்டும் என்பதற்காக, அதேபோன்று தனியார் கட்டடங்களில் இயங்கும் விடுதிகளில் அடிப்படை வசதிகள் இல்லையென்ற காரணத்திற்காக ரூ.31.50 இலட்சம் செலவில் இன்று அரசு விடுதிகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்டதற்கிணங்க, இவர்கள் நிதியிலிருந்து 5 இலட்சம் ஒதுக்கினாலும், கட்டும் கட்டடங்கள் ரூ.31.50 இலட்சத்தில்தான் கட்டப்படும் என்று இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 20, திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

20–

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

***10076–திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சேலம் மாவட்டம், வாழப்பாடி ஒன்றியம், கொமாரபாளையத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு கொமாரபாளையம் கிராமப் பொதுமக்கள் எவரும் மனு செய்யவில்லை என்பதால் சங்கம் பதிவு செய்யும் திட்டம் ஏதுமில்லை.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகையில் கொமாரபாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிப்பதற்கு அந்தப் பகுதியிலுள்ள மக்கள் எவரும் மனு செய்ய வில்லை என்று இங்கு கூறினார்கள். மனு செய்தால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, பால் உற்பத்தியாளர்களின் நலனைக் கருதி, அவர்களுக்கு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு முன்வருமா என்பதனை தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.